# கலைஞரின் மனசாட்சி முரசொலி மாறன் நினைவு நாள்: கழகத்தினர் அஞ்சலி!



சேலத்தில் தலைவர் கலைஞரின் மனசாட்சி. முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 21வது நினைவு தினத்தையொட்டி. சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார். உடன். மத்திய மாவட்ட கழக பொருளாளர். மு.கார்த்திகேயன். கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர். வீரபாண்டி பிரபு, நெசவாளர் அணி அமைப்பாளர். ஏ ஏ. ஆறுமுகம் உட்பட மாவட்ட கழக நிர்வாகிகள் இருந்தனர்.



அரசியல் மேதை கலைஞரின் மனசாட்சி முரசொலி மாறன் அவர்களின் 21ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பாபநாசம் தி.மு. கழக அலுவலகத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், ஒன்றியச் செயலாளர் என்.நாசர், பேரூர் செயலாளர் ச.கபிலன் ஒன்றியக்குழு தலைவர் சுமதி கண்ணதாசன், பேரூராட்சி தலைவர் பூங்குழலி கபிலன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் அரசியல் மேதை, கலைஞரின் மனசாட்சி முரசொலி மாறன் அவர்களின் 21ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தஞ்சை கலைஞர் அறிவாலயத்தில் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாநகரச் செயலாளர் சண். இராமநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



திண்டிவனம் நகரம், 14 வது வார்டு தி.மு.க. சார்பில் கிளைக் கழகச் செயலாளர் கே.ராசேந்திரன் ஏற்பாட்டில் கலைஞரின் மனசாட்சி முரசொலி மாறன் அவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் விழுப்புரம் மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் வழக்கறிஞர் கோ.அசோகன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனி சின்னசாமி எம்.சி, மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.முருகன், நகர கழகப் பொருளாளர் சின்னா கே.ராஜேந்திரன், மாவட்ட பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் எம்.குப்புசாமி, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி. ராஜேஷ், வழக்கறிஞர்கள் கோ.சேகர், பனையூர் டி.மோகனசுந்தரம், ஈ.செந்தில்வேல், பி.வேலாயுதம், க.விஜயகுமார், கிளாசிக் ரமேஷ், எஸ். பழநி, எம்.கண்ணதாசன், ஜி.முருகானந்தம், என்.வீரராகவன், எத்திராஜ், கோவிந்தாபுரம் சீத்தாராமன், எஸ்.சிவப்பிரகாசம், மேஸ்திரி என். ராஜேந்திரன், கே.கே.தாஸ், எஸ்.வேதமூர்த்தி, த.சீனுஎசன், ராஜேஷ், அரும்பு குணசேகரன் எம்.சி. மற்றும் பலர் கலந்து கொண்டு செஞ்சி சாலையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி மாறன் அவர்களின் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்கள்.



புதுச்சேரி லப்போர்த் வீதியில் உள்ள மாநில தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற முரசொலி மாறன் நினைவு நாளையொட்டி நிகழ்ச்சியில் அலங்கரிக்கப்பட்ட முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தலைமையில் திமுக நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., துணை அமைப்பாளர் அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னிலையில் கழக நிர்வாகிகள் மலர் அஞ்சலி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தொகுதி பொறுப்பாளர்கள் நன்னியூர் ராஜேந்திரன், முனவர் ஜான், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பி.இராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர, பேரூர் கழக செயலாளர்கள் , கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் அரசியல் சாணக்கியன், முரசொலி மாறன் அவர்களின் 21ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தஞ்சை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் கா. அண்ணாதுரை மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் பட்டுக்கோட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகானந்தம், அதிராம்பட்டினம் மேற்கு நகர செயலாளர் அஸ்லாம், சார்பு அணி அமைப்பாளர்கள் அறிவழகன், சொ. விஜயகுமார், மரு.சௌந்தர்ராஜன், செல்வநாயகி, அசோக் ராணி உள்ளிட்டோர் உள்ளனர்.



திருச்சியில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 21 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தில்லைநகரில் உள்ள தி.மு.க. மாவட்ட அலுவலகத்தில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்அருண் நேரு, அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் டோல்கேட் சுப்பிரமணி தொமுச மாநில செயலாளர் குணசேகர் கோட்டத் தலைவர் துர்கா தேவி, கண்ணன், செவந்தி லிங்கம் வழக்கறிஞர் மணிவண்ண, பாரதி, மோகன் தாஸ், ராம்குமார், கிராப்பட்டி செல்வம், பீ.ஆர்.பாலசுப்பிரமணியன், கலைச்செல்வி, சிங்காரம் உள்ளிட்ட பகுதி செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய செயலாளர்கள் மரியாதை செலுத்தினர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக திகழ்ந்த, முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவு தினத்தையொட்டி கரூர் கலைஞர் அறிவாலயம் முன்பு மாவட்டக் கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி வழிகாட்டுதல்படி, முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு கரூர் மாவட்ட கழக அவைத் தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர். சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநில, நிர்வாகிகள். செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள் வார்டு, கிளை நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



உதகை நகர தி.மு.க. சார்பில், அரசியல் மேதையும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான முரசொலி மாறன் அவர்களின் 21ம் ஆண்டு நினைவு தினம் நகர கழக அலுவலகத்தில் நகர கழக செயலாளர் எஸ். ஜார்ஜ் தலைமையில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் நகர துணைச் செயலாளர் கார்டன் கிருஷ்ணன், நகர அவைத் தலைவர் ஜெய கோபி, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் மஞ்சு குமார் மற்றும் கழகத் தோழர்கள் கமலக்கண்ணன், தேவதாஸ்,உமேஷ் கண்ணன், மகேஷ், அந்தோணி குரூஸ், மார்க்கெட் முஸ்தபா, விஷ்ணுகுமார், அருள் மாணிக்கம், சத்யராஜ், போஜன், வில்லியம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.